திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில நாட்களுக்கு முன் சமர்ப்பித்த பாலிசிநோட்டில் என்னென்ன சப்-கோர்ட்டுகள் அமைக்கப்படும் என்று லிஸ்ட் கொடுத்திருக்கிறார்கள். எப்பொழுது, எவை எவை எடுத்துக் கொள்ளப் பெறும் என்று ஏதாவது புரோக்கிராம் இருக்கிறதா ? இருந்தால் அவை பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் மசோதாவின் மீது பேசுகையிலேயே அதைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். எதை எதை இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப் பெறும், அடுத்த ஆண்டு எதை எதை எடுத்துக் கொள்ள அரசு உத்தேசித்துள்ளது என்று விரிவாக அப்பொழுதே சொல்லியிருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் இருக்கும் சப்-கோர்ட்டை இராமநாதபுரத்திற்கு மாற்றுவது பற்றி, அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகையில் அடுத்த ஆண்டு எடுத்துக் கொள்ளப் பெறும் என்று சொல்லியிருக்கிறார்கள். எந்த இடத்தில் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டு மாற்றப்படும் என்று நான் சொல்லவில்லை. அடுத்த ஆண்டு அதற்கான கட்டடம் கட்டுவதற்கான ஆய்வு முடிவு செய்யப்பெறும் என்று தான் சொன்னேன்.

பனையடிக் குத்தகை காய்கறி கூட்டுறவு சங்கம், கத்தரிப்புலம்.

***வினா எண் 38—திரு. எம். எஸ். மாணிக்கம் :** மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், கத்தரிப்புலம் பனையடிக் குத்தகை காய்கறி கூட்டுறவு சங்கம், காய்கறிகள் எற்றிச் செல்ல வாகனவசதி கேட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கு எப்பொழுது வேன் வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) இச்சங்கம் தற்போது செய்கின்ற காய்கறி விற்பனை ஒரு 'வேன்' வைத்துக்கொள்ள வேண்டிய அளவுக்கு இல்லை. தனியாக ஒரு 'வேன்' வைத்துக்கொள்வது சங்கத்தின் பொருளாதார நிலைமைக்கு உகந்ததாக இராது என்று கருதப்படுகிறது.

1980 ஜூலை 23]

திரு. எம். எஸ். மாணிக்கம்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலேயே காய்கறி கூட்டுறவுச் சங்கம் இது ஒன்றுதான். ஆகவே, இன்னும் அதிகமான காய்கறிகளை கொண்டு செல்லும் பொருட்டு வேன் வழங்க ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காய்கறிகளே அந்த அளவுக்கு இல்லை என்னும்போது வேன் எதற்கு?

(பதில் இல்லை)

சாத்தனூர் அணையின் மேல் மட்டக்கால்வாய் வெட்டும் திட்டம்.

வினா எண் 40—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூர் அணையின் மேல் மட்டக்கால்வாய் புதியதாக வெட்டுவது பற்றி ஆய்வு ஏதும் செய்யப்பட்டதா?

(ஆ) அப்பணி எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ) இத்திட்டம் பற்றி பூர்வாங்க ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. அதன் மீது திட்ட மதிப்பீடு, அறிக்கை முதலியன தயாரிக்க தலைமைப் பொறியாளர் அனுமதி கோரியுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. த. வேணுகோபால்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இத்திட்டத்தின் மதிப்பீடு செய்து அறிக்கை அளிக்க தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எப்பொழுது அந்த வேலை துவங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னி ஆற்றின் மீது கட்டப்பெற்றிருக்கிற சாத்தனூர் அணையிலிருந்து 750 கன அடி உபரி நீரை 5,250 ஏக்கர் புஞ்சை நிலத்திற்கு பாசன வசதி கொடுக்கவும், 1,920 ஏக்கர் நஞ்சை நிலங்களுக்கு பாசனத்தை உறுதி செய்யவும், 411 ஏக்கர் புஞ்சை நிலத்திற்கு பற்றாக் குறையை போக்கவும் வாய்ப்பு இருப்பதாக தலைமைப் பொறியாளர் அறிக்கை கொடுத்திருக்கிறார். ஆனால் பொன்னி ஆற்றின் மேல் பகுதியில் தர்மபுரி மாவட்டத்தில் ஒரு அணை கட்ட வேண்டிய சூழ்நிலையும் இருப்பதால், உபரி நீர் எவ்வளவு கிடைக்கும் என்று ஆய்வு நடத்தச் சொல்லி ஆணையிடப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வின் அறிக்கை வந்ததற்குப் பிறகு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பெறும்.